# குச்சவெளி பிரதேச சபை

# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 24 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை முகாமைதடதுவ அறிக்கை முறையே 2019 மே 22 ஆம், 2019 மே 31 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் குச்சவெளி பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செலுத்தவேண்டிய கணக்கு | | |
| 1996 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்துக்குரிய செலுத்தப்படாத சம்பளங்களும் கூலிகளும் ரூபா 442,426 தொகையை உறுதிப்படுத்தி வருமானத்திற்கு மாற்றுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகயின் துல்லியத் தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் அவற்றின் பெறுமதியினை சபை நிதிக்கூற்றில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையை பெற்ற பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். |
| ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை | | |
| ரூபா 1,430,029 தொகையான செலுத்தப்படாத சம்பளங்களும் கூலிகளும், வங்கி வட்டி, மூலதன | கணக்கு மீதிகளுடன் தொடர்புடைய | தொடர்புடைய ஆவணங்கள் பிரதேச சபையின் கோப்பில் |

| | | |
|---|---|---|
| வருமானம் ஆகியவற்றுக்கான விபரப் பட்டியல் மற்றும் ஆதன வரிக்கு ஆதன வரிப் பதிவேடு என்பன பேணப்படவில்லை. இதனால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | ஆதாரங்களை கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இனைக்கப்பட்டுள்ளது இருப்பினும் அவை குறித்த வருடத்திற்கான நிதிக்கூற்றி சேர்கப்படவில்லை. |

1.4 இணங்காமைகள்

-----------------------------

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் I பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. | பிணைகளின் அளவுகள் தீர்மானிக்கப்பட்டு அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது முகாமைத்துவ உதவியாளர்களே காலத்துக்குக் காலம் கடமையை மேற்கொள்கிறார்கள். களஞ்சிய பொறுப்பாளர் என்ற பதவியை குறிப்பிட்டு முகாமைத்துவ உதவியாளர்களுக்கு பதவி வழங்காத படியினால் பிணை பெறப்படவில்லை. |
| ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் i) பிரிவு 396 | ஆறு மாதங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட, ஆனால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 180,220 கூட்டு மொத்தப் பெறுமதியான 16 காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இவை தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் தங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை அறியத்தரவும். | 16 மாற்றப்படாத காசோலைகளில் 11 மாற்றப்படாத 165,238.95 தொகையான காசோலைகள் சீர்செய்யப்பட்டுள்ளன. மீதி 05 மாற்றப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. |

| | | | |
|---|---|---|---|
| ii) பிரிவு 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 20,524,793 தொகையான வைப்புக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இரண்டு வருட காலத்துக்கு மேற்பட்ட வைப்புக்கள் சம்பந்தமாக வருமானத்திற்கு மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 30,807,863 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 5,718,425 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு ரூபா "000" | ஆண்டுக்கான வருமானம் ரூபா "000" | பெறப்பட்ட வருமானம் ரூபா "000" | 2018.12.31 இல் நிலுவை ரூபா "000" | பாதீடு ரூபா "000" | ஆண்டுக்கான வருமானம் ரூபா "000" | பெறப்பட்ட வருமானம் ரூபா "000" | 2017.12.31 இல் நிலுவை ரூபா "000" |
| வீதவரிகள் | 10.603 | 12,584 | 11,668 | 7,200 | 9,202 | 6,367 | 6,731 | 6,284 |
| வாடகை | 6,357 | 5,159 | 4,664 | 4,116 | 7,386 | 4,729 | 4,427 | 3,621 |
| அனுமதி பத்திர கட்டணம் | 1,643 | 1,201 | 1,201 | 4 | 1,290 | 1,721 | 1,721 | 4 |
| ஏனையவை | 25,338 | 42,567 | 42,373 | 501 | 11,414 | 1,777 | 1,755 | 493 |

(அ) மீளாய்வாண்டில் வீதவரி நிலுவை கடந்த வருடத்தை விட ரூபா 916,000 தொகையால் ஆல் அதிகரித்துள்ளது. இது வீதவரி அறவீட்டில் மந்த நிலைமையைக் காட்டுகின்றது. மேலும் வாடகை மற்றும் ஏனைய நிலுவைகள் முறையே ரூபா 495,000 மற்றும் ரூபா 8,000 தொகையால் அதிகரித்துள்ளமை அவ்வருமானங்களின் அறவீடு மந்தகதியில் நடைபெற்றுள்ளது என்பதை காட்டுகிறது.

2.2.2 வீதவரிகள்

-----------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 7,197,663 கூட்டு மொத்தமான வீதவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீத வரி நிலுவையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வீதவரி அறவீடு சம்பந்தமாக கடந்த காலங்கில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் மக்கள் மீது அறவிட முடியாமல் போனது. இதுசம்பந்தமாக உள்;ராட்சி ஆணையாளரின் ஆலோசனை பெறப்படவுள்ளது. |

2.2.2 கடை வாடகை வருமானம்

----------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இறைச்சிக்கடை குத்தகையாளர்கள் குத்தகையை செலுத்தத் தவறும் போதே அவர்களது பாதுகாப்பு வைப்பிலிருந்து குத்தகைத் தொகையை அறவிடாமல் வருட இறுதியிலே இந்நடைமுறை பின்பற்றப்படுவதனால் ரூபா 3,634,077 தொகையான நிலுவை நிலுவைகள் அறவிடப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவருகின்றது. மேலும் இந்நிலுவைகளுக்கு சபையினால் காலப்பகுப்பாய்வை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்காமையால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. | அறவீடு செய்யப்படக்கூடிய நிலுவைகள் அனைத்தும் அறவீடு செய்யப்படுவதுடன் ஏனையவை தொடர்பாக உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் காலபகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காலப்பகுப்பாய்வு இனிவரும் காலத்தில் நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்படும். |

2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 சனவரி தொடக்கம் இன்றுவரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை ரூபா 9,249,570.00 பெறுமதியான தொகை 2019.04.05இல் பதிவாளர் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்கு உரிய படிவத்தில் விண்ணப்பம் |

2019.04.18 இல் கோரப்பட்டுள்ளது. 2018 முதல் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள்மற்றும் பொது வழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) ஆரம்பிக்கப்படாத ஒப்பந்தங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| i) கொல்களம் மற்றும் எரிவாயுக் கட்டடம் நிர்மாணித்தல் - நிலாவெளி | | |
| சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கொல்களம் மற்றும் எரிவாயுக் கட்டடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 7,054,086 தொகைக்கு ஒப்பந்தம் 2017 ஆகஸ்ட் 03 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இவ்வேலைத் திட்டத்தினை செய்வதற்கான சாத்தியவள அறிக்கை தயாரிக்கப்படாமல் கேள்வி கோரப்பட்டு மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் அமைந்துள்ள காணியை தெரிவு செய்து வேலை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதால் தங்களுக்கு சுகாதார சீர்கேடுகள் ஏற்படுமென்று மக்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. எனவே 2019 மே 16 ஆம் திகதி வரை இவ் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த 02 வருடங்களாக இவ் வேலை ஆரம்பிக்கப்படாமல் காணப்படுகின்றது. இதற்கு பொருத்தமான இடம் ஒன்றை சபை பெற்று இக்கட்டிடத்தை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தகுந்த இடம் ஒன்று பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| ii) எரிவாயுக் கட்டடம் நிர்மாணித்தல் - புல்மோட்டை | | |
| மீளாய்வாண்டில் சபையினால் ரூபா 2,000,000 தொகைக்கு எரிவாயுக் கட்டடம் நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இன்று வரை இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எரிவாயுக் கட்டடம் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எரிவாயுத்திட்டம் ஆரம்பிக்க ஆளணி அங்கீகாரம் இல்லாத காரணத்தினால் ஆரம்பிக்கப்படவில்லை. |

(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிலிசரு திட்டத்தின் கீழ் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையம் நிலாவெளியில் ரூபா 17,943,879 தொகையில் நிர்மாணிக்கப்பட்டு 2016 மார்ச் 26 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இன்று வரை திண்மக்கழிவு சேகரிப்பு முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ள சபை நடவடிக்கை எடுத்திருக்காமையினால் செய்யப்பட்ட செலவினம் விளைவற்றுக் காணப்படுகின்றது. | கடந்த 03 வருடங்களாக நீர் இணைப்புப் பெறாமையினால் பயனற்றுக் காணப்படும் கட்டிடத்தை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய இடத்தில் சவர் நீர் ஆகையால் ஆரம்பிக்க முடியவில்லை. தற்போது நீரிணைப்புப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.. நீரிணைப்புக் கிடைக்கப்பெற்றதும் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை எவ்வித அறிவினையும் கொண்டிருக்கவில்லை. | சபை இவ்விடயம் தொடர்பாக பூரண விளக்கங்களைப் பெற்று நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடைவதற்குரிய செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறிவினை கெண்டிருக்கவில்லை என்பதன் கருத்து தெரியவில்லை. 2018 வரவு செலவுத் திட்டத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தேசியக் கொள்கைகள் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்று நிருபங்களிற்கமைவாக போதைவஸ்து ஒழிப்பு நடவடிக்கை, டெங்கு ஒழிப்பு நடவடிக்கை, தொற்றாத நோய்கள் தொடர்பான நடவடிக்கை என்பவற்றின் மூலம் சுகாதாரம் பேணப்பட்டுள்ளது. மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும் நிலையான அபிவிருத்தி தொடர்பாக வேலைத் திட்டங்களுக்கான முன்மொழிவுகள் கோரப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| i) | 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு தேறப்படாத 05 காசோலைகளின் ரூபா 15,603 கூட்டு மொத்த தொகையை உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேறப்படாத காசோலை தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வசூலிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| ii) | குழாய் நீர் விநியோகத் திட்டம் தொடர்பாக சனசமூக நிலையங்களுக்கு 2013 ஆம் ஆண்டில் முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 700,000 தொகையை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தொகையினை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தங்களால் எடுக்கப்படும் நடவடிக்கையினை அறியத்தரவும். | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| iii) | சபையினால் பயன் படுத்தப்பட்டு வந்த பிக்கப் வாகனம் 2015 ஆம் ஆண்டு விபத்துக்குள்ளாகி முழுமையாக சேதமடைந்திருந்த போதிலும் நிதிப்பிரமானம் 104 இன் பிரகாரம் விசாரணைக் குழுவை நியமித்து இழப்புக்களின் பெறுமதி, மற்றும் விபத்துக்கு பொறுப்பான நபர்களை இனங்காணல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இழப்புத் தொகை காப்புறுதி நிறுவனம் மூலம் பெற்று திருத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| iv) | குறித்தொதுக்கப்பட்ட அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் கீழ் கட்டுக்குளத்தில்ரூபா 316,460 தொகைக்கு நிர்மாணிக்கப்பட்ட பொதுக்கிணறு காணப்படும் காணியின் உரிமை தனியார் ஒருவருடையதாகக் காணப்படுகின்ற போதிலும் இக்காணியின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றம் | காணி உரிமை மாற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையின் பெயருக்கு மாற்ற பிரதேச செயலாளர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| v) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம், பிரதேச சபையின் எல்லைக்குள் செயற்பட்டுவரும் சுற்றுலா விடுதிகளின் ஆண்டு வருமானத்தில் 01 சதவீதத்தை உரிமத் தீர்வையாக சபை அறவிடுதல் வேண்டும். எனினும் சபையின் எல்லைக்குள் செயற்பட்டு வரும் 10 சுற்றுலா விடுதிகளுக்கான 01 சதவீத தீர்வையினை அறவிடாமையினால் அண்ணளவாகரூபா 1,500,000 தொகை வருமானத்தை சபை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. | இவ் விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கையினை எடுத்து வருமானத்தினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| vi) | அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 இலக்க சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்தின் முன் அனுமதியின்றி சபையின் செயலாளரினால் 2015 ஆம் ஆண்டில் 140 ஊழியர்களுக்கு அமைய அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்ட போதிலும் அவ்வாறு ஊழியர்களை நியமிப்பதற்கான தேவைப்பாடு சபையில் காணப்படவில்லை. மேலும் இவ் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக சபையின் முன்னாள் செயலாளரால் 2015 ஆம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 1,493,294 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரை சீர்செய்யப் பட்டிருக்கவில்லை. | இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் ஆலோசித்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| vii) | தலைமைச் செயலாளர் செயலகச் சுற்றறிக்கை 10/2009 பிரிவு (2) இன் | மேலதிக தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பு சபைக்கான கொடுப்பனவு தலைவருக்கு ரூபா 5,000 படியும் அங்கத்தவர்களுக்கு தலா ரூபா 4,000 படியும் வழங்க முடியும். எனவே 2015 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவாக கூட்டு மொத்தமாக ரூபா 13,000 தொகையே வழங்கியிருக்க வேண்டும். எனினும் சபை ரூபா 25,000 தொகையை வழங்கியமையால் ரூபா 12,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. 2019 மே 16 ஆம் திகதி வரை இம்மேலதிகத் தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |
| viii) | ஓய்வூதிய திணைக்களத்தின் 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 02/2011 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் உள்@ராட்சி நிறுவனங்களில் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்தப்படுதல் வேண்டும். எனினும் இதற்கு மாற்றமாக சபையில் கடமையாற்றிய ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்குப் பதிலாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்டதுடன் 2010 சனவரி தொடக்கம் 2014 நவம்பர் மாத காலத்திற்கான ஊழியர் சேமலாப நிதியத்துக்கான பங்களிப்புப் பணத்தை குறித்த காலத்தில் செலுத்தாத காரணத்தினால் அந்நிதியம் ரூபா 1,915,306 தொகையான தண்டப் பணத்தை செலுத்துமாறு வேண்டியிருந்தது. எனினும் 2019 மே 16 ஆம் திகதி வரை இம் மேலதிகத் | இவ்விடயம் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கையினை உரிய அதிகாரிகள் ஊடாக மேற்கொள்ள வேண்டும். | பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| ix) | பிரதேச சபையினால் புல்மோட்டையில் ரூபா 24,444,588 செலவில் 35 கடைகள் கொண்ட சந்தைக் கட்டிடம் புல்மோட்டை வாவியில் மண் நிரப்பப்பட்டு நிர்மாணிக்கப்பட்டமையினால் மத்திய சுற்றாடல் அதிகார சபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் போன்றவை அனுமதி மறுத்திருந்தது. மேலும் இக்கடைகளை நிர்மாணிப்பதற்கு முன்னர் வியாபாரத்திற்கு பொருத்தமான இடமா என்பதை ஆராயாது கடைகள் நிர்மாணிக்கப்பட்டமையினால் நிர்மாணிக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை கடைகள் அனைத்தும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது. | இக் கடைத்தொகுதியை பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை சபை எடுக்க வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டு விலகிச் சென்ற 05 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 214,205 தொகையான நிலுவைக் கடனை அவர்களிடம் அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடன்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

3.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் தவிசாளர் 2015 பெப்ரவரி 05 ஆம் திகதியும், 2015 மார்ச் 23, 24 மற்றும் 25 ஆம் திகதிகளிலும் உத்தியோகபூர்வ ரீதியாக சபையின் அதிகார பிரதேசத்திற்குட்பட்ட உப அலுவலகங்களுக்கும் உள்@ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கும் சென்றிருந்தமையானது அவர் அப்பிரயாணத்திற்காகப் பயன்படுத்திய அலுவலக வாகனத்தின் ஓட்டப்பதிவுப் புத்தகத்தின் குறிப்புக்கள் உறுதிப்படுத்திய போதிலும் அத்திகதிகளில் அவர் கொழும்புக்கு உத்தியோகபூர்வ ரீதியாக பயணம் செய்ததாகக் கூறி இணைந்த படிகளும் போக்குவரத்துப் படிகளுமாக ரூபா 43,100 தொகையினைப் பெற்றிருந்தார். 2019 மே 16 ஆம் திகதி வரை தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக எனது கடந்த வருட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இன்று வரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிகக் கொடுப்பனவை உரியவரிடமிருந்து அறவீடு செய்ய சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

3.5 சொத்து முகாமைத்துவம்

3.5.1 சொத்துக்களைப் பதிதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட 08 வாகனங்கள் ஏழு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றை | இவ்விடயம் தொடர்பாக உரிய அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக நடவடிக்கையினை எடுக்க வேண்டும். | இவ்விடயம் தொடர்பாக உளளுராட்சி ஆணையாளர் அவர்களது ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.5.2 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் காணப்படும் 02 உழவு இயந்திரம், பிக்கப், மோட்டார் சைக்கிள், டிப்பர், திண்மக்கழிவகற்றும் பவுசர் என்பன திருத்தம் செய்து பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்படுகின்ற போதிலும் 01 தொடக்கம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்து பயன்படுத்த சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய வாகனங்களைப் பயன்படுத்துவதுடன் திருத்தம் செய்யக்கூடிய நிலையில் இல்லாத வாகனங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவும். | இருப்பக் கணக்கெடுப்பு சபையின் சிபார்சிற்கமையவும் சபையின் தீர்மானத்திற்கமையவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

### 3.6 பெறுகை

ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திண்மக் கழிவு சேகரிப்பு நிலைய கட்டிட நிர்மாணம் | | |
| மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிலிசரு திட்டத்தின் கீழ் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தை நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 4,946,825 தொகைக்கு சில்மியா ஒப்பந்தகாரருக்கு 2015 ஒக்தோபர் 19 ஆம் திகதி வழங்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| i) இத் திண்மக்கழிவு நிலையத்திற்கான கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு | மின்சாரம் வழங்கல், நீர் விநியோகம், சுற்றுவேலி அமைத்து கட்டிடத்தை பயன்படுத்த நடவடிக்கை | ஏற்பாடு மேலதிகமாக இல்லாமையினால் மின்சாரம், நீர், வேலி போன்றவை |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்ட போது இக்கட்டடத்திற்கான மின்சாரம் வழங்கல், நீர் விநியோகம் மற்றும் சுற்றுவேலி அமைத்தல் போன்ற வேலைகள் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே இக்கட்டிட வேலை பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும். | எடுக்கப்பட வேண்டும். | உள்ளடக்கப்படவில்லை ல |
| ii) | இவ்வேலை 2015 திசெம்பர் 19 ஆம் திகதி ஒப்பந்தக்காரரால் நிறைவு செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் 2018 யூலை 18 ஆம் திகதி வரை ஒப்பந்தக்காரர் நிர்மாண வேலைகளை நிறைவு செய்யாது கைவிட்டமையினால் முடிவுற்ற 60% ஆன வேலைக்காக ரூபா 2,947,682 தொகை செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடம் விளைவற்ற செலவினமாக மாறியுள்ளது. அத்துடன் திண்மக்கழிவு சேகரிக்கும் முகாமைத்துவ செயற்பாடுகளையும் சபையினால் முன்னெடுக்க முடியாது காணப்படுகின்றது. | திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்பாட்டை ஆரம்பித்து கொட்டப்படும் குப்பைகளினை முகாமைப்படுத்த வேண்டும். | வேலை முடிவுற்று செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| iii) | சபையின் எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகள் புல்மோட்டையில் உள்ள தனியார் காணி ஒன்றில் கொட்டப்பட்டு வருகின்றமையினால் அப் பகுதியில் சூழல் பிரச்சனைகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது. | | பொருத்தமான இடம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

(ஆ) செந்தூர் கிராம வீதிக்கு கொங்கிரீட் இடுதல்

-----------------------------------------------------

| | | |
|---|---|---|
| மாகாண சபைகள் மற்றும் உளளுராட்சி அமைச்சின் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்ட நிதி ஒதுக்கீட்டின் | ஒப்பங்கள் வழங்கப்படும் போது பெறுகை வழிகாட்டி மற்றும் சுற்றுநிருபங்கள் | அ தொடக்கம் ஈ வரையானது --------------------------- |

| | | |
|---|---|---|
| கீழ் செந்தூர் கிராம வீதிக்கு கொங்கிரீட் இடுதலுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>i) பெறுகை வழிகாட்டியின் 6.2.2 இன் பிரகாரம் தேசிய பெறுகை நடைமுறை (NCB) பின்பற்றப்படும் போது குறைந்தது 21 நாட்கள் காணப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் கோரப்பட்ட விலை மனு 14 நாட்களையே கொண்டிருந்தது.<br><br>(ii) 2017 யூன் 30 தொடக்கம் 2017 யூலை 13 ஆம் திகதி வரை விலை மனுக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய காலமாக சபை நிர்ணயித்திருந்த போதிலும் சபையினால் விலை மனு கோருவதற்கான பத்திரிகை விளம்பரம் 2017 யூலை 01, 04 ஆம் திகதிகளில் விளம்பரப் படுத்தப்பட்டிருந்ததுடன் இக்காலப்பகுதியில் 04 நாட்கள் விடுமுறை நாட்களாகவும் காணப்பட்டிருந்ததுடன் 09 நாட்களே விலை மனுக்கள் விநியோகிக்கக்கூடிய நாட்களாக காணப்பட்டமையினால் பெறுகை வழிகாட்டியின் 1.2.1 இன் பிரிவு (இ) இன் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை. | கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டும். | ---------------------<br>இதற்கான பதில் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பிரதி இணைக்கப்படுகின்றது. |
| iii) இவ் வேலைக்கு 06 ஒப்பந்தகாரர்கள் விண்ணப்பித்திருந்த போதிலும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு விலைமனு மதிப்பாய்வினைச் செய்யாமல் ஒரு ஒப்பந்தகாரருக்கு ரூபா 4,262,496 தொகைக்கு ஒப்பந்தத்தினை வழங்கியிருந்தது. மேலும் வழங்கப்பட்ட ஒப்பந்தக்காரர் வேலையை கைவிட்டமையால் அடுத்த தகைமையுடைய | பெறுகை வழிகாட்டி 5.3.13 இன் பிரிவு (ஈ) க்கு அமைய ரூபா 51,200 விலைமனுப் | |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தகாரருக்கு வேலை வழங்க முடியாமல் போனதுடன் மீண்டும் கேள்வி கோர வேண்டிய நிலை ஏற்பட்டது. | பிணை காசாக்கப் பட்டிருக்காமையால் அத்தொகையினை உரிய அலுவலகரிடமிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| iv) | தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் குறித்த வேலையினை பொறுப்பேற்றதன் பின்னர் அவ்வேலையினை ஆரம்பிக்காது எவ்வித அறிவித்தலுமின்றி கைவிட்டுள்ளமையால் பெறுகை வழிகாட்டி 5.3.13 இன் பிரிவு (ஈ) க்கு அமைய ரூபா 51,200 விலைமனுப் பிணை (Bid Bond) காசாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுகை வழிகாட்டி 8.11.4 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரர் மீது மேலதிக நடவடிக்கையினை சபை எடுத்திருக்கவில்லை. | பெறுகை நடைமுறை மேற்கொள்ளப்படும் போது முறையாகத் திட்டமிட்டு செயற்பட வேண்டியதுடன் அவசியத்தன்மை கருதி ஒப்பந்தங்கள் அவசரமாக வழங்கப்படும் போது அரச நிதிக்கு இழப்பு ஏற்படாத வண்ணம் செயற்படுதல் வேண்டும். இவ்வாறு ஊழியர்களின் கவனக் குறைவால் இழப்பு ஏற்படும் போது அதற்குப் பொறுப்பானவர்களை இனங்கண்டு இழப்பினை ஈடு செய்ய நடவடிக்கை எடுக்கபப்பட வேண்டும். | |
| v) | சபையினால் இவ்வேலைக்கு மீண்டும் மட்டுப்படுத்தப்பட்ட தேசிய போட்டிக் கேள்வி (LNCB) கோரப்பட்ட போது பெறுகை வழிகாட்டியின் 6.2.2 இன் பிரகாரம் குறைந்தது 14 நாட்கள் காணப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 07 நாட்கள் மாத்திரமே உள்ளடக்கி கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் இரத்துச் செய்யப்பட்ட கேள்வியில் காணப்பட்ட 02 ஒப்பந்தக் காரர்களையே மீண்டும் தெரிவு செய்து அவர்களுக்கு எவ்வித எழுத்து மூலமான அறிவித்தல்களும் வழங்காமல் மட்டுப்படுத்தப்பட்ட தேசிய போட்டிக் கேள்விக்கான விலை மனுக்கள் வழங்கப்பட்டு அவர்களில் ஒருவருக்கு ரூபா 5,000,000 பெறுமதிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | | அவசியத்தன்மை கருதி மேற்கொள்ளப்பட்டது. |

இ) கலாச்சாரக் கட்டடம் நிர்மாணம்

-------------------------------------------------

| | | |
|---|---|---|
| புறநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கலாச்சார மண்டபம் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ரூபா 5,656,434 தொகைக்கு 2016 ஏப்ரல் 18 ஆம் திகதி ஒரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. சபையினால் வழங்கப்பட்ட முன்மொழிவுக்கு இணங்க கலாச்சார நிகழ்வுகளை நடாத்துவதற்கான அம் மண்டபத்தினை பயன்படுத்தாது அதனை மக்கள் வங்கிக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டு அதன் வடிவம் மாற்றியமைக்கப்பட்ட போது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுவரில் $7.78m^3$ அளவுடைய ரூபா 83,246 தொகை பெறுமதியான சுவர் அகற்றப்பட்டது. | உரிய பதில் சபையினால் எமக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏற்பட்ட இழப்பினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் சபையினால் தரப்படவில்லை. |